# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2024

| தரம் - 13 (2024) | கணக்கீடு - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண் .......................................

**அறிவுறுத்தல்கள்:**
- எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- *1* தொடக்கம் *30* வரையுள்ள சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- *31* தொடக்கம் *50* வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் *1* இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| *01 – 30* | |
| *31 – 50* | |
| மொத்தம் | |

***01)*** நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டத்தின் படி, நிதிக்கூற்றுக்களின் நோக்கமும் எண்ணக்கரு சட்டகத்தின் நோக்கமும் பின்வருமாறு

A - எண்ணக்கருக்களின் அடிப்படையில் இலங்கை கணக்கியல் நியமங்களை விருத்தி செய்வதற்கு உதவுதல்.

B - நிறுவனத்தின் பொருளாதார வளங்கள் தொடர்பிலான உரிமத்தின் முகாமையின் செயல்முகாமை திறனை மதிப்பிடுவதற்கு பயனர்களுக்கு உதவுதல்.

C - கொடுக்கல் வாங்கல் அல்லது நிகழ்வுக்கு நியமம் பொருந்தாத போது அல்லது ஒரு நியமம் கணக்கியல் கொள்கை ஒன்றின் தெரிவை அனுமதிக்கின்ற போது நிலையான கணக்கியல் கொள்கைகளை உருவாக்குவதற்கு தயாரிப்பாளர்களுக்கு உதவுதல்.

D - நியமங்களுக்கமைவாக வணிகத்தின் நிதிநிலைமை குறித்த தகவல்களை வழங்குதல்.

E - நியமங்களை புரிந்து கொள்ளவும் அனைத்து தரப்பினருக்கும் உதவுதல்.

F - நியமங்களுக்கமைவாக வணிகத்தின் நிதி பெறுபேறு தொடர்பான தகவல்களை வழங்குதல்.

எண்ணக்கரு சட்டகத்தின் நோக்கம் தொடர்பில் சரியானவை எவை?

*(1)* A, B மட்டும் *(2)* A, B, C மட்டும் *(3)* A, C, E மட்டும்
*(4)* A, B, C, E மட்டும் *(5)* A, B, C, D, E, F (..........)

***02)*** சொத்தினை மீள்மதிப்பீடு செய்யும் போது மீறப்பட்ட எண்ணக்கரு யாது?

*(1)* தொடர்ந்தியங்கும் *(2)* இணைதல் *(3)* காலஅளவீட்டு
*(4)* வெளிப்படுத்தல் *(5)* வரலாற்று கிரயம் (..........)

***03)*** கம்பனியொன்று 2022.04.01 இல் ரூபா 200,000 பெறுமதியான பராமரிப்பு சேவை ஒப்பந்தமொன்றை 2 வருடங்களுக்கு மேற்கொண்டது. 2023.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முற்றுமடங்கிய வருமான கூற்றில் ரூ 100,000 மாத்திரமே வருமானமாக இனங்காணப்பட்டது. இதனுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு எது?

*(1)* தேறல் *(2)* வரலாற்றுக் கிரயம் *(3)* தொடர்ந்தியங்கும்
*(4)* அலகுசார் *(5)* கொள்கை மாறாமை (..........)

❖ **4, 5 மற்றும் 6 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

கமலன் வணிகத்தின் 30.09.2022 இல் முடிவடைந்த மாதத்திற்கு பின்வரும் தகவல்கள் பெயர்தெடுக்கப்பட்டது.

01.09.2022 பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு ரூபா 360,000

12.09.2022 01.09.2022 இல் கொள்வனவு செய்யப்பட்ட இருப்புக்களில் ரூபா 200,000 கிரயமானவை கடனுக்கு பாலாவுக்கு விற்கப்பட்டது. (வணிகம் கிரயத்துடன் 20% இலாபம் வைத்து விற்பனை விலையை தீர்மானிக்கின்றது. அதேவேளை விற்பனையில் 5% வியாபாரக் கழிவு வழங்குகின்றது.

18.09.2022 பாலாவுக்கு விற்கப்பட்ட பண்டங்களில் 20% வீதமானவை பழுதடைந்த காரணத்தால் திருப்பியனுப்பப்பட்டது.

20.09.2022 பாலாவு தரவேண்டிய தொகையில் 50% மானவை 10% கழிவு கொடுத்து மீதி காசு பெறப்பட்டது.

***04)*** கமலன் வணிகத்தில் மேற்கூறிய நடவடிக்கைகளை பதிவு செய்த கணக்கீட்டு சமன்பாட்டின் தேறிய விளைவாக அமைவது

| | **சொத்துக்கள் (ரூபா)** | **பொறுப்புக்கள் (ரூபா)** | **உரிமையாண்மை (ரூபா)** |
|---|---|---|---|
| *(1)* | 347 800 | 360 000 | 14 800 |
| *(2)* | 371 280 | 360 000 | 11 280 |
| *(3)* | 365 600 | 360 000 | 5 600 |
| *(4)* | 100 320 | 91 200 | 9 120 |
| *(5)* | 367 360 | 360 000 | 7 320 |

*(..........)*

***05)*** கமலன் வணிகத்தின் மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்கு பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் முறையே,

*(1)* கொடுப்பனவு கைச்சாத்து, பற்றுச்சீட்டு, செலவுத்தாள், பற்றுச்சீட்டு

*(2)* பட்டியல், பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு

*(3)* பட்டியல், பட்டியல், வரவுத்தாள், செலவுத்தாள்

*(4)* கொடுப்பனவு கைச்சாத்து, பட்டியல், செலவுத்தாள், நாளேட்டு கைச்சாத்து

*(5)* பட்டியல், பட்டியல், செலவுத்தாள், நாளேட்டு கைச்சாத்து *(..........)*

***06)*** மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களை பாலா வணிகத்தில் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தும் மூல ஏடுகள் எவை?

*(1)* காசுக் கொடுப்பனவு நாளேடு, கொள்வனவு திரும்பல் நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு

*(2)* கொள்வனவு நாளேடு, கொள்வனவு திரும்பல் நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு

*(3)* கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு, விற்பனை திரும்பல் நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு

*(4)* கொள்வனவு நாளேடு, கொள்வனவு திரும்பல் நாளேடு, காசுக் கொடுப்பனவு நாளேடு

*(5)* காசுக் கொடுப்பனவு நாளேடு, கொள்வனவு திரும்பல் நாளேடு, பொது நாளேடு *(..........)*

**07)** லக்ஷன் கம்பனியின் 2023.02.28 இல் உள்ளவாறான வங்கிக்கூற்று ரூபா 65,000 சாதகமான மீதியைக் காட்டியது. அத்தினத்தில் காசுக் கட்டுப்பாட்டு மீதியும், வங்கிக் கூற்று மீதியும் வேறுபடுவதற்கான ஒரே காரணியாக அமைந்தது சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 15,000 ஆகும். இக்கம்பனியின் மார்ச் மாத கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

★ காசு கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் ரூபா 550,000

★ வங்கி அறவீடுகள் ரூபா 20,000

**மேலதிக தகவல்கள்:**

*1.* மார்ச் மாதத்தில் வசூலிக்கப்படாத காசோலை ரூபா 30,000

*2.* பெப்ரவரி மாதம் சமர்ப்பிக்கப்படாத காசோலை மார்ச் மாதத்தில் மாற்றப்பட்டது.

*3.* மார்ச் 31 இல் வங்கிக் கூற்று மீதி ரூபா 90,000 ஆகும்.

மார்ச் மாதத்தில் காசு பெறுவனவு நாட்குறிப்பேட்டின் மொத்தம் யாது?

*(1)* ரூபா 640,000 *(2)* ரூபா 690,000 *(3)* ரூபா 740,000

*(4)* ரூபா 670,000 *(5)* ரூபா 610,000 *(..........)*

**08)** வரையறுத்த தாமரா உற்பத்தி கம்பனியின் 31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான விபரம் வருமாறு

| | | |
|---|---|---|
| 01.04.2022 இல் முடிவுப் பொருள் கிரயம் | ரூ | 200,000 |
| 31.03.2023 இல் முடிவுப் பொருள் கிரயம் | ரூ | 120,000 |
| பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம் | ரூ | 480,000 |
| நேர்க் கூலி கிரயம் | ரூ | 220,000 |
| மொத்த மேந்தலைக் கிரயம் | ரூ | 520,000 |
| உற்பத்தி அல்லாத மேந்தலைக் கிரயம் | ரூ | 340,000 |

31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்திக் கிரயம் மற்றும் விற்பனைக் கிரயம் முறையே அமைவது

*(1)* ரூ. 880,000 , ரூ 1300,000 *(2)* ரூ. 660,000 , ரூ 740,000

*(3)* ரூ. 1020,000 , ரூ 960,000 *(4)* ரூ. 1220,000 , ரூ 1300,000

*(5)* ரூ. 880,000 , ரூ 960,000 *(..........)*

**09)** 2022.04.01 இல் ரூபா 600 000 மூலதனமாக இட்டு ஆரம்பிக்கப்பட்ட மகேந்திரன் வணிகமானது முறையாக கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளவில்லை. கணக்கேடுகளிலிருந்து எடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு

★ 2023.03.31 இல் மொத்த சொத்துக்கள் ரூபா 800 000 உம் மொத்த பொறுப்புக்கள் ரூபா 350 000 உம் ஆகும்.

★ உரிமையாளர் கணக்காண்டினுள் ரூபா 450 000 பெறுமதியான தனது மோட்டார் வாகனத்தை வணிகத்தில் ஈடுபடுத்தியுள்ளனர்.

இத்தகவல்களின் அடிப்படையில் வணிகத்தின் நிதி செயற்றிறனைக் கணிக்கும்போது சரியான நிதி செயற்றிறனை என்ன?

*(1)* நட்டம் ரூ. 150 000 *(2)* இலாபம் ரூ. 300 000 *(3)* நட்டம் ரூ. 300 000

*(4)* இலாபம் ரூ. 600 000 *(5)* நட்டம் ரூ. 600 000 *(..........)*

❖ ***10, 11 ஆகிய வினாக்களுக்கு பதிலளிக்க பின்னவுரம் தகவலைப் பயன்படுத்தவும்.***

பின்வரும் தகவல்கள் 31.03.2023 அன்று முடிவடைந்த வருட ஒரு பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கம் தொடர்பானது.

| விபரம் | ("000") தொகை |
|---|---|
| பெறப்பட்ட சந்தா (இதில் 25% 31.03.2023 உடன் தொடர்புடையது) | 360 |
| விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு நன்கொடை பெறப்பட்டன. | 500 |
| நிலையான வைப்பு தொகையில் கிடைக்கும் வட்டி வருமானம் | 50 |
| மொத்த செலவுகள் | 300 |

**மேலதிக தகவல்கள்:**

★ ஒரு உறுப்பினருக்கு ஆண்டுக்கான சந்தா ரூ. 4000 31.03.2023 அன்று சங்கத்தில் 100 உறுப்பினர்கள் இருந்தனர்.

★ நன்கொடைகள் பெறப்பட்ட ஆண்டிலிருந்து தொடங்கி 5 ஆண்டுகளுக்கு வருமானமாக அங்கீகரிப்பது சங்கத்தின் கொள்கையாகும்.

★ நிலையான வைப்புத் தொகை 31.05.2023 அன்று முதிர்ச்சியடையும் போது வட்டி பெறப்படும்.

★ அனைத்து செலவுகளும் பணமாக செலுத்தப்பட்டது.

★ 31.03.2022 அன்று காசு மீதி ரூ 150 000

***10)*** 31.03.2023 இல் முடிவடைந்த வருட வருமான மிகை என்ன?

*(1)* ரூ 120 000 *(2)* ரூ 210 000 *(3)* ரூ 250 000

*(4)* ரூ 500 000 *(5)* ரூ 650 000 *(..........)*

***11)*** 31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசு மீதியில் தேறிய அதிகரிப்பு என்ன?

*(1)* ரூ 610 000 *(2)* ரூ 560 000 *(3)* ரூ 520 000

*(4)* ரூ 710 000 *(5)* ரூ 470 000 *(..........)*

***12)*** குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனம் அதன் இறுதி கொடுப்பனவு மேற்கொள்ள முன்னர் நிதிநிலைமைக் கூற்றில் பயன்பாட்டுரிமை சொத்தாக காட்டப்பட்டது. இங்கு பின்பற்றப்படும் எண்ணக்கரு பாதுகாக்கப்படும் பண்புகள் முறையே

| | எண்ணக்கரு | பண்புகள் |
|---|---|---|
| *(1)* | தோற்றத்திலும் காட்டிலும் கருத்து முக்கியத்துவம் | உறுதிப்படுத்தக்கூடிய தன்மை |
| *(2)* | தொடர்ந்து செல் எண்ணக்கரு | உண்மையான பிரதிநிதித்துவம் |
| *(3)* | தோற்றத்திலும் காட்டிலும் கருத்து முக்கியத்துவம் | உண்மையான பிரதிநிதித்துவம் |
| *(4* | தோற்றத்திலும் காட்டிலும் கருத்து முக்கியத்துவம் | பொருத்தமான தன்மை |
| *(5)* | தொடர்ந்து செல் எண்ணக்கரு | பொருத்தமான தன்மை |

'

*(..........)*

**13)** பங்குடமை தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை எது / எவை எனக் குறிப்பிடுக.

A - பங்குடமை வணிகமொன்றில் பங்காளர் ஒருவர் இளைப்பாறும் போது நன்மதிப்பு சீராக்கத்தினால் ஏனைய பங்காளரது மொத்த உரிமை குறையும்.

B - பற்றுக்கள் இலாப பகிர்வின் ஓர் அங்கமாகக் கொள்ளப்படும்.

C - பங்காளரது செலுத்த வேண்டிய கடன்வட்டியை சீராக்கும் போது பங்குடமையின் சட்டம் கட்டாயம் பின்பற்ற வேண்டும்

*(1)* A மட்டும் *(2)* A, B மட்டும் *(3)* C மட்டும்

*(4)* A, C மட்டும் *(5)* A, B, C ஆகிய எல்லாம் (..........)

**14)** அமுதா, நிலா, கலா பங்குடமை ஒன்றின் பங்காளர்கள். இவர்களின் இலாப நட்டம் பகிரும் வகிதம் முறையே 5 : 3 : 2 ஆகும்.

| | **மூலதன கணக்கு** ("000") | **நடைமுறைக் கணக்கு** ("000") |
|---|---|---|
| அமுதா | 8000 | 700 (செலவு) |
| நிலா | 5000 | 500 (வரவு) |
| கலா | 3000 | 500 (செலவு) |

01.04.2022 இல் இப்பங்குடமையில் இருந்து இளைப்பாறினார். நன்மதிப்பு சீராக்கத்தின் பின் நிலாவின் கடன் கணக்கு மீதி ரூ. 5100 000 ஆகும். இப்பங்குடமையின் மொத்த நன்மதிப்பு யாது?

*(1)* 2500 000 *(2)* 3000 000 *(3)* 2000 000

*(4)* 4000 000 *(5)* 5000 000 (..........)

**15)** நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டவாக்கத்தின் படி பின்வரும் கூற்றுக்களில் எது? / எவை சரியானது?

A - நிதிக்கூற்றுக்களின் மூலங்களை நிதிக்கூற்றுக்களில் இனங்காண்பதற்கு அவற்றின் வரைவிலக்கணங்களுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

B - வரலாற்றுக் கிரயம், நடைமுறைப் பெறுமதி போன்றன நிதிக்கூற்றுக்களின் மூலங்களை அளவிடுவதற்கான அளவீட்டு அடிப்படையாகும்.

C - பொருத்தமான தன்மை, உண்மையான பிரதிநிதித்துவம் போன்றன நிதிக்கூற்றுத் தகவல்களின் அடிப்படைப் பண்புசார் குணாதிசயங்கள் ஆகும்.

*(1)* B, C *(2)* A, B *(3)* A, C *(4)* C *(5)* A, B, C (..........)

**16)** LKAS 8 (கணக்கீட்டுக் கொள்கைகள், மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்) இன்படி பின்வரும் கூற்றுக்களுள் மதிப்பீட்டு மாற்றமாக எது / எவை சரியானது / சரியானவை?

A - இருப்பு கிரய மதிப்பீட்டினை முதல் உள்ளே முதல் வெளியே (FIFO) முறையில் இருந்து நிறையளிக்கப்பட்ட சராசரி கிரய (WAC) முறைக்கு மாற்றம் செய்தல்.

B - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களினை மதிப்பீடும்போது கிரய மாதிரியிலிருந்து மீள்மதிப்பீட்டு மாதிரிக்கு மாறுகின்றமை.

C - ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரு ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள்

*(1)* A, B *(2)* B, C *(3)* A, B, C *(4)* A மட்டும் *(5)* A, C (..........)

❖ **வரையறுத்த சிங்கர் கம்பனியின் 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான தகவல்கள் வருமாறு**

| | |
|---|---|
| விற்பனைகள் | 12000 |
| மொத்த இலாபம் | 4400 |
| செயற்பாட்டு செலவீனம் | 1800 |
| செலுத்திய வருமானவரிச் செலவு | 400 |
| செலுத்திய இடைக்கால பங்கிலாபம் | 600 |
| செலுத்திய வட்டிச் செலவீனம் | 300 |
| காணி மீள் மதிப்பீட்டு மிகை | 3000 |
| மோட்டார் மீள் மதிப்பீட்டு பற்றாக்குறை | 1500 |

காணியானது 31.03.2023 இல் முதல் தடவையாக மீள்மதிப்பிடப்படுவதுடன், மோட்டார் வான் 31.03.2020 இல் 1000 000 கூட்டி மீள்மதிப்பிடப்பட்டது.

➢ ***17, 18, 19* ஆம் வினாக்களுக்கு மேலே உள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.**

***17)*** 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான மொத்த வருமானம், மொத்தச் செலவீனங்கள்

| | மொத்த வருமானம் (000ல்) | மொத்தச் செலவீனங்கள் (000ல்) |
|---|---|---|
| *(1)* | 15 000 | 12 200 |
| *(2)* | 12 000 | 11 600 |
| *(3)* | 15 000 | 11 600 |
| *(4)* | 12 000 | 11 200 |
| *(5)* | 15 000 | 11 100 |

*(..........)*

***18)*** 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபமும், ஏனைய முற்றடக்க வருமானமும்

| | இலாபம் (000ல்) | ஏனைய முற்றடக்க வருமானம் (000ல்) |
|---|---|---|
| *(1)* | 1400 | 3000 |
| *(2)* | 1200 | 2000 |
| *(3)* | 1400 | 2000 |
| *(4)* | 1400 | 3400 |
| *(5)* | 5400 | 3400 |

*(..........)*

***19)*** 31.03.2023 இல் முடிவுற்ற வருடத்துக்கான நிறுத்தி வைத்த இலாபமும் மொத்த முற்றடக்க வருமானமும்

| | நிறுத்தி வைத்த இலாபம் (000ல்) | ஆண்டுக்கான மொத்த முற்றடக்க வருமானம் (000ல்) |
|---|---|---|
| *(1)* | 600 | 3400 |
| *(2)* | 800 | 3000 |
| *(3)* | 400 | 2000 |
| *(4)* | 600 | 3000 |
| *(5)* | 800 | 3400 |

*(..........)*

➤ **20 அம் 21 ஆம் வினாக்களுக்கு கீழே உள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடை தருக.**

❖ வரையறுத்த அபான்ஸ் கம்பனியின் ஏடுகளில் 01.04.2022 இல் உள்ள மீதிகள் வருமாறு

| | "**000ல்**" |
|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்கிலாபம் | 60 000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் - காணி | 2 000 |
| பொது ஒதுக்கம் | 6 000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 12 000 |

31.03.2023 இல் முடிவடைந்த நிதி வருடத்தில்

★ ரூபா 6000 000 நிறுத்தி வைத்த இலாபம் மூலதனமாக்கப்பட்டது.

★ ரூபா 4000 000 பொது ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது.

★ ஆண்டுக் காலத்தில் 3000 000 ஆல் காணி குறைத்து மதிப்பிடப்பட்டது.

★ ரூபா 5000 000 பெறுமதியான பங்குகள் உரித்து வழங்கல் செய்யப்பட்டதுடன் ஆண்டுக் காலத்தில் செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்குலாபம் ரூ 3000 000

★ 31.03.2023 உள்ளவாறான நிறுத்தி வைத்த இலாபம் ரூ 7000 000

**20)** 31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த முற்றடக்க வருமானம் யாது?

*(1)* ரூபா 8 000 000 *(2)* ரூபா 9 000 000 *(3)* ரூபா 6 000 000

*(4)* ரூபா 12 000 000 *(5)* ரூபா 14 000 000 (..........)

**21)** 31.03.2023 இல் உரிமையாண்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு / குறைவு யாது? '000'

*(1)* ரூ 10 000 அதிகரிப்பு *(2)* ரூ 18 000 குறைவு *(3)* ரூ 8 000 அதிகரிப்பு

*(4)* ரூ 11 000 குறைவு *(5)* ரூ 8 000 குறைவு (..........)

**22)** வரையறுத்த ராஜாராம் கம்பனியில் 2023.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் பின்வருமாறு

| **விபரம்** | **ரூ '000'** |
|---|---|
| ஆண்டுக்கான இலாபம் | 2350 |
| மோட்டார் அகற்றல் ஆதாயம் | 150 |
| காணி மீள்மதிப்பு குறை - முதல் தடவை | 300 |
| பெறுமானத் தேய்வு | 1400 |
| வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களின் படிகள் குறைவு | 150 |
| வியாபார வருமதி (கொண்டு செல் தொகை அதிகரிப்பு) | 600 |
| வியாபார சென்மதி குறைவு | 450 |

கம்பனி வரி விலக்களிப்பு காலத்தில் செயற்படுகின்றது.

LKAS - 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இன் படி செயற்பாட்டு நடவடிக்கையில் உருவான / பயன்படுத்தி காசு

*(1)* ரூ 2850 000 *(2)* ரூ 2450 000 *(3)* ரூ 2700 000

*(4)* ரூ 2550 000 *(5)* ரூ 2950 000 (..........)

**23)** பின்வரும் தகவல்கள் ஒரு உற்பத்தி கம்பனி ஒன்றுடன் தொடர்புடையவை

31.03.2023 இல்

| | |
|---|---|
| நடைமுறை விகிதம் | 2 : 1 |
| நடைமுறைப் பொறுப்பு | 300 000 |
| இருப்புக்கள் | 120 000 |

31.03.2023 இல் முடிவடைந்த வருடத்திற்கான

| | |
|---|---|
| விற்பனை வருவாய் | 600 000 |
| மொத்த இலாப எல்லை | 25 % |

01.04.2022 இல் இருப்புக்கள் 180 000 இருந்தது

கம்பனியின் விரைவு விகிதம் மற்றும் சரக்கு புரள்வு விகிதம் என்பன எவை?

| | **விரைவு விகிதம்** | **சரக்கு புரள்வு விகிதம் (தடவை)** |
|---|---|---|
| *(1)* | 0.4 | 3.75 |
| *(2)* | 0.625 | 3 |
| *(3)* | 0.625 | 4 |
| *(4)* | 1.6 | 3 |
| *(5)* | 1.6 | 4 |

(..........)

**24)** பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

| | |
|---|---|
| விற்பனை | 4000 000 /= |
| வருடத்திற்கான இலாபம் | 200 000/= |
| வட்டிச் செலவுகள் | 60 000/= |
| வருமான வரிச் செலவுகள் | 40 000/= |

31.03.2023 இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய இலாப விகிதம், வட்டிக்காப்பு விகிதம் என்பன

| | **தேறிய இலாப விகிதம்** (%) | **வட்டிக் காப்பு விகிதம் (தடவைகள்)** |
|---|---|---|
| *(1)* | 5 | 3.3 |
| *(2)* | 5 | 5 |
| *(3)* | 6 | 4 |
| *(4)* | 6 | 5 |
| *(5)* | 7.5 | 4 |

(..........)

**25)** கிரயங்களை வகைப்படுத்தல் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானவை?

A - இருப்பு மதிப்பீட்டு நோக்கத்திற்கமைய கிரயங்களை உற்பத்திக் கிரயம், காலக் கிரயம் என வகைப்படுத்தலாம்.

B - முகாமையாளருக்கு காணப்படுகின்ற பொறுப்பு அடிப்படையில் ஏதாவது கிரயமொன்றை தவிர்ப்பதற்கு அல்லது இழிவுபடுத்தல் ஆற்றல் அடிப்படையில் கிரயம் கட்டுப்படுத்தக்கூடிய கிரயம், கட்டுத்த முடியாத கிரயம் என வகைப்படுத்தப்படுகின்றன.

C - கிரயங்கள் நடத்தை அடிப்படையில் நிலையான கிரயம், மாறும் கிரயம் என வகைப்படுத்தப்படும்.

D - தீர்மானமெடுத்தல் நோக்கத்திற்கமைய கிரயங்களை தொடர்புடைய கிரயம், தொடர்பற்ற கிரயம் எனவும் வகைப்படுத்தலாம். இவ் இரண்டு கிரயங்களும் தீர்மானமெடுத்தலின் போது கவனத்திற் கொள்ளப்படும்.

*(1)* A, B, C *(2)* A, B *(3)* B, C *(4)* C, D *(5)* A, C (..........)

**26)** மூலப் பொருள் *Y* தொடர்பான தகவல் வருமாறு

| | ஆகக் குறைந்தது | ஆகக் கூடியது | சராசரி |
|---|---|---|---|
| கட்டளைக் காலம் (வாரங்கள்) | 4 | ? | 8 |
| பயன்பாடு (அலகுகள்) | ? | 8000 | 6000 |

ஆகக் கூடிய இருப்பு 144 000 அலகுகள் மறு கட்டளை மட்டம் மற்றும் மறுகட்டளைத் தொகை யாது?

| | **மறுகட்டளை மட்டம் (அலகுகள்)** | **மறுகட்டளைத் தொகை (அலகுகள்)** |
|---|---|---|
| *(1)* | 96 000 | 144 000 |
| *(2)* | 112 000 | 16 000 |
| *(3)* | 160 000 | 96 000 |
| *(4)* | 276 000 | 80 000 |
| *(5)* | 96 000 | 64 000 |

(..........)

**27)** அகிலா *PLC* என்ற நிறுவனம் விளையாட்டு பொம்மை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றில் பொருத்துதல், முடிவுறுத்தல் ஆகிய பகுதியில் பாதிடப்பட்ட தகவல்கள் வருமாறு

| | **பொருத்துதல்** | **முடிவுறுத்தல்** |
|---|---|---|
| அலகு ஒன்றுக்கு செலவு செய்த நேரம் | 20 நிமிடம் | 30 நிமிடம் |
| உறிஞ்சப்பட்ட மேந்தலை | குறித்த அலகிற்கு ரூ 40 | ஊழிய மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ 100 |

அகிலா *PLC* யின் விளையாட்டுப் பொம்பை ஒன்றுக்கான உற்பத்திக் கிரயம் ரூ 360 ஆகும். எனின் பொம்பை ஒன்றுக்கான முதன்மைக் கிரயம் யாது?

*(1)* ரூ 180 *(2)* ரூ 270 *(3)* ரூ 90 *(4)* ரூ 390 *(5)* ரூ 220

**28)** வரையறுக்கப்பட்ட நிமால் பொதுக்கம்பனி 2023 மார்ச் மாதத்திற்கு தயாரித்த சம்பளப் பட்டியலின் மொத்தக் கூட்டுத் தொகைகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் வருமாறு

| **விபரம்** | **ரூ '000'** |
|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 2400 |
| (கூட்டு படிகள் | 600 |
| | 3000 |
| கழிப்பனவுகள் | |
| சம்பள முற்பணம் | (200) |
| *10%* ஊழியர் சேமலாப நிதி $(EPF)$ | (300) |
| தேறிய சம்பளம் | 2500 |

தொழில் கொள்வோர் பங்களிப்பு

| | |
|---|---|
| ஊழியர் சே. இலாப நிதி - 15 % | 450 |
| ஊழியர் நம்பிக்கை நிதி - 3 % | 90 |

சம்பளமும் அதனுடன் தொடர்புடைய கழிப்பனவுகளும் குறிப்பிட்ட மாதத்திற்கு அடுத்து வரும் மாதத்தின் முதலாவது வாரத்தினுள் செலுத்தப்படும்.

நிமால் பொதுக் கம்பனியின் 2023 மார்ச் மாதத்திற்கான ஊழியர் சம்பளம் தொடர்பான மொத்தச் செலவினம்

*(1)* ரூ 300 000 *(2)* ரூ 2500 000 *(3)* ரூ 2950 000

*(4)* ரூ 3540 000 *(5)* ரூ 4440 000 *(..........)*

**29)** பின்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை ஆகும்.

A - சமப்பாட்டு புள்ளியில் அலகுக்கான நிலையான கிரயமும் அலகுக்கான பங்களிப்பும் சமனாகும்.

B - சமப்பாட்டு புள்ளிக்கு அப்பால் வரும் பங்களிப்பு இலாபம் ஆகும்.

C - சமப்பாட்டு புள்ளி அலகு அதிகரிக்கும் போது பாதுகாப்பு எல்லை அலகும் அதிகரிக்கும்.

D - எதிர்பார்க்கும் விற்பனை அலகுகள் மாற்றமடையும் போது சமப்பாட்டு புள்ளி அலகுகளும் மாற்றமடையும்.

E - சமப்பாட்டு புள்ளியை அடைய முன்னர் மொத்த நிலையான கிரயம் மொத்த பங்களிப்பை விட அதிகமாகும்.

*(1)* A மாத்திரம்

*(2)* A, B மாத்திரம்

*(3)* A, B, D

*(4)* A, B, E

*(5)* A B C D E எல்லாம் *(..........)*

**30)** அம்மு *PLC* ஆனது புதிய செயற்றிட்டத்திற்காக இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்ய எண்ணயுள்ளது. இவ் புதிய இயந்திரத்தின் கொள்விலை ரூ 1800 000 ஆகும். இதன் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயட்காலம் 5 வருடங்களாகும். எஞ்சிய பெறுமதி ரூ 300,000 ஆகும். இச் செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வரிக்கு பின்னரான வருடாந்த இலாபம் வருமாறு.

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| வரிக்குப் பின் இலாபம் (ரூ '000') | 400 | 500 | 600 | 700 | 800 |

இச் செயற்றிட்டத்தின் திரும்ப பெறும் காலம்

*(1)* 2 வருடங்கள்

*(2)* 3 வருடங்கள்

*(3)* 2 வருடங்கள் 6 மாதங்கள்

*(4)* 2 வருடங்கள் 4 மாதங்கள்

*(5)* 2 வருடங்கள் 3 மாதங்கள் (..........)

➢ ***31 - 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.***

**31)** பின்வருவன கணக்கீட்டு சூழலுடன் தொடர்புடைய சூழற்காரணிகள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பொருத்தமான சூழலைக் குறிப்பிடுக.

| மாறிகள் | சூழல் |
|---|---|
| A - புதிய கணக்கீட்டு நியமமொன்றை அறிமுகப்படுத்தல் | ............................................................ |
| B - கணக்கீட்டு மென்பொருளை கணக்கீட்டு பதிவுக்கு பயன்படுத்தல் | ............................................................ |
| C - அரசு வரி வீதத்தை மாற்றம் செய்தல் | ............................................................ |
| D - கணக்கீட்டு, கணக்காய்வு நியமசட்டம் 1995 இல் அறிமுகப் படுத்தப்பட்டமை | ............................................................ |

**32)** பின்வரும் உருப்படிகளுக்குரிய கணக்கீட்டு மூலங்களைக் குறிப்பிடுக.

A - கம்பனியின் ஆண்டுக்கான வரி ..............................................................................

B - வருமதியாளர் மீள் மதிப்பு குறைப்பு நட்டம் ..............................................................................

C - காணி மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ..............................................................................

D - விற்பனை முற்பணம் ..............................................................................

**33)** சாரங்கன் வணிகத்துடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு

- சரக்கிருப்புக்கள் ரூபா 125 000 இற்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டது.
- ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் 10% வியாபாரக் கழிவு கழித்த பின் கடனுக்கு ரூபா 72 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டது.
- 2022.10.01 இல் இரு வருட வாடகையாக ரூபா 20 000 செலுத்தப்பட்டது.
- ரூ 30 000 பெறுமதியான வங்கி மேலதிக பற்றை சாரங்கன் தனது சொந்த நிதியிலிருந்து தீர்த்தார்.

**மேலதிக தகவல்கள்:**

*(1)* வணிகம் 25% இலாபம் சேர்த்து விற்பனை செய்கின்றது.

(2) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுக்கு 10% நேர்கோட்டு முறையில் தேய்விடுகிறது. இவ் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் 2023.03.31 இல் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்.

2023.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்பட்ட தேறிய விளைவு யாது?

சொத்துக்கள் = பொறுப்புக்கள் + மூலதனம் + நிறுத்தி வைத்த வருவாய்

............................ .............................. .............................. ..............................................

**34)** ஹரி வியாபாரம் தனது செயற்பாடுகளை 01.04.2022 இல் ஆரம்பித்தது. இது பொருள்களை கிரயத்தில் 20% கூட்டி விற்பனை செய்கின்றது. 31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான விற்பனை ரூ 600 000 ஆகும். 31.03.2023 இல் சரக்கிருப்பு பெறுமதி ரூ 50 000 வியாபாரத்தின் செயற்பாட்டு செலவு மொத்த இலாபத்தில் 40 % ஆகும்.

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) வருடத்திற்கான கொள்வனவுகள் ரூ ..........................................................................................

(ஆ) வருடத்திற்கான இலாபம் ரூ ..........................................................................................

**35)** கீழே காட்டப்பட்டுள்ள அறிக்கையானது நிதிக் கணக்கீட்டு கூறு அல்லது முகாமைக் கணக்கீட்டுக் கூறு எனக் குறிப்பிடுக.

| **கூற்றுக்கள்** | **நிதி / முகாமைக் கூறு** |
|---|---|
| A - உரிமையாண்மை மாற்றக் கூற்று | .................................................................................... |
| B - வரவு செலவுத் திட்டம் | .................................................................................... |
| C - கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் | .................................................................................... |
| D - காசுப்பாய்ச்சல் கூற்று | .................................................................................... |

**36)** பின்வருவனவற்றுடன் தொடர்புடைய பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.

(1) நிதிக்கூற்றுக்களில் ''ரூபா'' என்ற நாணய அலகை உட்படுத்தல் ............................................................

(2) விலை அதிகரிப்புச் சீராக்கங்கள் செய்யப்படுவதை தவிர்த்தல் ............................................................

(3) நிறுவனம் பின்பற்றும் கணக்கீட்டு கொள்கையை நிதிக் கூற்றுக்களில் காட்டுதல். ............................................................

(4) இருப்பு பெறுமதி விலை வீழ்ச்சியை முற்றடக்க வருமானக் கூற்றில் உட்படுத்தல் ............................................................

**37)** மாதவன் வணிகத்தில் இடம்பெற்ற சில கணக்கீட்டு வழுக்கள் கீழே தரப்படுகின்றது.

A - உட்சுமை கூலி ரூபா 5000 வெளிச்சுமை கூலியாக பதியப்பட்டுள்ளது.

B - மோட்டார் வாகனம் கணக்கு மீதி ரூபா 520 000 பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை.

C - கொடுத்த கழிவு ரூபா 8000 பெற்ற கழிவு எனக் கருதி இரட்டைப் பதிவு செய்யப்பட்டது.

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(1) பரீட்சை மீதியினை பாதிக்காத வழு எது? ..............................

(2) இலாபத்தில் அதிகரிப்பை ஏற்படுத்திய வழு எது? ..............................

(3) தொங்கல் கணக்கிற்கு மாற்ற வேண்டிய தொகை யாது? ..............................

(4) இலாபத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் தொகை யாது? ..............................

**38)** பின்வரும் கூற்றுக்கள் சரியா / பிழையா என்பதனைக் குறிப்பிடுக.

A - மூலதன மீதிகளின் விகிதப்படி இலாப நட்டம் பகிரப்படும் போது மூலதனத் தொகைக்கு வட்டி செலுத்துவது என்பது அவசியமற்றது. ..............................

B - பொருள் பற்றுக்களை சீராக்கும் போது பங்குடமையின் உரிமையாண்மையானது மாற்றமடையாது. ..............................

C - 1890 ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் படி மூலதன மீதிகளுக்கு 5% வழங்கப்படும். ..............................

D - 1890 ஆம் ஆண்டு பங்குடமைச் சட்டத்தின் பிரிவு 24 இன் படி பங்காளர் சம்பளத்திற்கு உரித்துடையவரல்லர் ..............................

**39)** கவி, புவி, ரவி என்போர் சம பங்காளர்கள் ஆவர். (ரூபா 000)

| | **கவி** | **புவி** | **ரவி** |
|---|---|---|---|
| மூலதனக் கணக்கு மீதிகள் (ஆரம்பம்) | 12000 | 10000 | 8000 |
| நடைமுறைக் கணக்கு மீதி (ஆரம்பம்) | 1200 | 2100 | 3200 |

இப்பங்குடமையில் இருந்து நிதியாண்டு இறுதியில் ரவி எனும் பங்காளி இளைப்பாறிச் செல்கிறார். நிதியாண்டு காலப்பகுதிக்கான இலாபம் 4800 000 ஆகும். (ரூபா 000 ல்)

| | **கவி** | **புவி** | **ரவி** |
|---|---|---|---|
| காசுப்பற்று | 600 | 400 | 500 |

ரவி இளைப்பாறும் தினத்தில் நிறுவன நன்மதிப்பு 4500 000 ஆக பெறுமானமிடப்பட்டு மூலதனக் கணக்கு ஊடாக சீராக்கம் செய்யபடும் எனின்

(1) கடன் கணக்கிற்கு மாற்றப்படும் தொகை ..............................

(2) நன்மதிப்பு சீராக்கத்திற்கான நாளேட்டுப் பதிவுகள்

..............................

..............................

..............................

..............................

..............................

**40)** வரையறுத்த சுதா *PLC* இன் 31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான விபரம் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| ★ | விற்பனை மற்றும் ஏனைய வருமானம் | ரூ | 8800 000 |
| ★ | மொத்தச் செலவீனங்கள் | ரூ | 5400 000 |
| ★ | காணி மீள் மதிப்பு மிகை | ரூ | 1000 000 |
| ★ | செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் | ரூ | 900 000 |
| ★ | உரிமை வழங்கல் பெறுமதி | ரூ | 1500 000 |
| ★ | 01.04.2022 இல் உரிமையாண்மை | ரூ | 10200 000 |

பின்வருவனவற்றைக் கணிக்குக.

*(1)* இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் ரூ ................................

*(2)* 31.03.2021 இல் உரிமையாண்மை ரூ. ................................................................................

**41)** மாலா $PLC$ 01/04.2020 அன்று ரூ 1000 000 க்கு ஒரு இயந்திரத்தை வாங்கியது. இந்த நாளில் அதன் பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி முறையே 5 ஆண்டுகள் மற்றும் ரூ 100 000 என மதிப்பிடப்பட்டது. இந்த இயந்திரத்தின் ஒரு முக்கிய பாகம் 01.04.2022 அன்று ரூ 280 000 செலவில் மாற்றியமைக்கப்பட்டது. இந்த திகதியில் இயந்திரத்தின் எஞ்சிய ஆயுட்காலம் 4 ஆண்டுகள் என்றும் அதன் எஞ்சிய பெறுமதி ரூ 180 000 என்றும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

A - 31.03.2023 இல் முடிவடையும் காலப்பகுதிக்கான தேய்மானம்

ரூபா ................................................................................................

B - 31.03.2023 இல் இயந்திரத்தைக் கொண்டு செல்லும் தொகை

ரூபா ................................................................................................

**42)** நாதன் கம்பனி சொத்துப்படுத்தல் உரிமை அடிப்படையின் கீழ் 01.04.2022 இல் இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்தது. இது தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 01.04.2022 இல் செலுத்திய ஆரம் கொடுப்பனவு | ரூபா 200 000 |
| வருடாந்த குத்தகைத் தவணைப் பணம் | ரூபா 100 000 |
| குத்தகைக் காலம் | 4 ஆண்டுகள் |
| குத்தனை மூலம் ஏற்பட்ட ஆரம்ப நேர் செலவு | ரூபா 20 000 |
| குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதம் | 10 % |

10% இல் கழிவு காரணி

| வருடம் | *1* | *2* | *3* | *4* |
|---|---|---|---|---|
| கழிவுக் காரணி | 0.909 | 0.826 | 0.751 | 0.683 |

*(1)* 01.04.2022 இல் சொத்துப்படுத்தல் உரிமை கணக்கின் மீதியாக அமைவது

................................................................................................

*(2)* 31.03.2023 இல் உள்ளவாறு

(அ) நடைமுறைப் பொறுப்பு ................................................................

(ஆ) நடைமுறை அல்லாப் பொறுப்பு ........................................................

**43)** வரையறுத்த மதுசா பொதுக் கம்பனியின் பிரித்தெடுக்கப்பட்ட நிதிநிலைமைக் கூற்று வருமாறு

| | **2023.03.31** | **2022.03.31** |
|---|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | 7700 | 8000 |
| தொழிற்படு மூலதன மாற்றம் | 800 | 600 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 3200 | 2400 |

**மேலதிக தகவல்கள்:**

கம்பனி வரி விலக்களிப்பு காலத்தில் செயற்படுவதுடன், நடப்பாண்டில் இடைக்காலப் பங்கு இலாபமாக ரூபா 300 000 செலுத்தப்பட்டது.

LKAS - 07 (காசுப் பாய்ச்சல் கூற்று) நியமத்தின் படி செயற்பாட்டு நடவடிக்கையில் உருவான பயன்படுத்திய தேறிய காசுப்பாய்ச்சல் யாது?

................................................................................................

**44)** பின்வரும் தகவல்கள் 31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மிதுசா கம்பனியுடன் தொடர்புடையதாகும்.

| | |
|---|---|
| விற்பனை வருமானம் | 8000 000 |
| மொத்த இலாபம் | 3500 000 |
| மொத்தச் செலவீனம் | 6000 000 |
| செயற்பாட்டுச் செலவீனம் | 1200 000 |

மேலதிக தகவல்கள்

★ நிதிச் செலவீனங்கள் 01.04.2022 இல் பெறப்பட்ட கடனின் வட்டியை பிரதிபலிக்கின்றது.

★ கம்பனி வரி விலக்களிப்பு காலத்தில் செயற்படுகின்றது.

பின்வருவனவற்றைக் கணிக்குக.

(1) தேறிய இலாப வீதம் ..........................................................................................

(2) வட்டி காப்பு விகிதம் (தடவைகள்) ..........................................................................

**45)** நிறுவனமொன்றின் பொருட் கிரயக் கட்டுப்பாடு தொடர்பான அடிப்படைத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

(அ) குறித்த குறியீட்டு இலக்கத்தைக் கொண்ட பொருள் பெறுவனவு வழங்கல், மீதி, என்பவற்றை அலகுகளில் மாத்திரம் பதியப்படும்.

(ஆ) குறித்த திணைக்களத்திற்கு அல்லது பகுதிக்கு பொருட்கள் தேவைப்படும் போது களஞ்சியத்துக்கு பொருள் கோரல் செய்தல்

(இ) களஞ்சியத்தினால் அல்லது பொருள் தேவைப்படும் பகுதியினால் கொள்வனவுப் பகுதிக்கு பொருள் கோரப்படுதல்.

(ஈ) கொள்வனவு பகுதி தேவைப்படும் பொருட்களைக் கோரி விநியோகத்தருக்கு அனுப்பும் பட்டியல்.

மேலே கூறிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தப்படும் ஆவணத்தை அதன் எழுத்துக்கெதிரே குறிப்பிடுக.

(அ) ............................................ (ஆ) ............................................

(இ) ............................................ (ஈ) ............................................

**46)** குமரன் உற்பத்திக் கம்பனியின் ஊழியக் கிரயம் தொடர்பான தகவல்கள் வருமாறு .பின்வரும் கிரயங்களில் நேர் கிரயமாயின் $(T)$ எனவும் நேரில் கிரயமாயின் $(F)$ எனவும் வகைப்படுத்துக.

A - இயந்திர இயக்குனருக்கான அடிப்படையச் சம்பளம் (..........................)

B - இயந்திர இயக்குநருக்கான உபகாரக் கொடுப்பனவு (கம்பனி இலாபத்தின் படி) (..........................)

C - உற்பத்தி முகாமையாளருக்கான அடிப்படைச் சம்பளம் (..........................)

D - இயந்திர இயக்குனருக்கான ஊழிய சேமலாப நிதியச் செலவு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிச் செலவு (..........................)

**47)** அலுமாரி (மரம்) தயாரிக்கும் வணிகத்தின் பின்வரும் கிரயங்களில் எது முதன்மை கிரயங்களாகும்?

| **கிரய விடயம்** | **(ஆம் / இல்லை)** |
|---|---|
| A - மேலதிக நேரத்திற்குரிய கூடுதல் கொடுப்பனவு | .............................. |
| B - இலாப அடிப்படையிலான உபகார கொடுப்பனவு | .............................. |
| C - பயன்படுத்தும் மரத்தின் கிரயம் | .............................. |
| D - விசேட கட்டளை ஒன்றிற்கான மேலதிக நேரத்திற்குரிய கூடுதல் கொடுப்பனவு | .............. |

**48)** மலரவன் கம்பனி ஒருவகையான கைப்பையினை உற்பத்தி செய்யத் திட்டமிடுகிறது. இப்பொருட்கள் தொடர்பான குறிப்பிட்டவொரு காலப்பகுதிக்கான மதிப்பிட்ட தகவல்கள் வருமாறு

| **விபரம்** | **தொகை** |
|---|---|
| அலகொன்றுக்கான நேர் மூலப்பொருள் கிரயம் | ரூ 4600 |
| அலகொன்றுக்கான நேர்க் கூலிக் கிரயம் | ரூ 2000 |
| அலகொன்றுக்கான ஏனைய நேர்க் கிரயம் | ரூ 1400 |
| அலகொன்றுக்கான முதன்மைக் கிரயம் | ரூ 8000 |
| நேர் ஊழிய வீதம் மணித்தியாலம் ஒன்றுக்கு | ரூ 500 |
| உற்பத்தி மேந்தலை உறிஞ்சல் வீதம் (நேர் ஊழிய மணித்தியாலமொன்றுக்கு) | ரூ 600 |
| உற்பத்தி அல்லா மேந்தலைகள் மொத்தக் கிரயத்தின் | 20% |
| அலகொன்றுக்கான இலாபம் விற்பனை விலையில் | 25% |

பின்வருவனவற்றைக் கணிக்குக.

A - அலகொன்றுக்கான மதிப்பிடப்பட்ட உற்பத்தி மேந்தலைக் கிரயம் ..........................................................

B - அலகொன்றுக்கான மதிப்பிடப்பட்ட உற்பத்திக் கிரயம் ரூபா ..........................................................

C - அலகொன்றுக்கான மதிப்பிடப்பட்ட மேந்தலைக் கிரயம் ரூபா ..........................................................

D - அலகொன்றுக்கான மதிப்பிடப்பட்ட விற்பனை விலை ரூபா ..........................................................

**49)** சாரிகா நிறுவனத்தின் பாதிடப்பட்ட தகவல்கள் வருமாறு

| **விபரம்** | **தொகை** |
|---|---|
| நிலையான கிரயம் | ரூ 800 000 |
| பாதுகாப்பு எல்லை பெறுமதி | ரூ 400 000 |
| சமப்பாட்டு புள்ளியில் மொத்த மாறும் கிரயம் | ரூ 800 000 |

நிறுவனத்தின் பாதிடப்பட்ட இலாபத்தைக் கணிப்பிடுக.

..........................................................................................................................................

**50)** கீர்த்தனா *PLC* போட்டோ பிரதி இயந்திரமொன்றை கொள்வனவு செய்ய திட்டமிடுகின்றது. பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.

| வருடம் | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| ஆரம்ப முதலீடு | (1000) | | | | | |
| தேறிய செயற்பாட்டு காய்ச்சல் | | 330 | 330 | 330 | 230 | 330 |
| கழிவு செய்த காசுப்பாய்ச்சல் | | 260 | 230 | 190 | 130 | 210 |

இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி ரூ. 100 000 பயன்தரு ஆயுட்காலம் 05 ஆண்டுகள்

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

*(1)* கணக்கீட்டு திரும்பல் வீதம் ..........................................................

*(2)* தேறிய நிகழ்காலப் பெறுமதி ..........................................................